ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 2.9 – எம்மாவீடு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.9 – எம்மாவீடு

‡ எம்மா வீட்டுத் ⋆
திறமும் செப்பம் ⋆
நின் செம் மா பாத பற்புத் ⋆
தலை சேர்த்தொல்லை ⋆
கைம்மா துன்பம் ⋆
கடிந்த பிரானே ⋆
அம்மா அடியேன் ⋆
வேண்டுவதீதே ‖ **2.9.1** ‖

ஈதே யான் உன்னைக் ⋆
கொள்வதெஞ்ஞான்றும் ⋆
என் மை தோய் சோதி ⋆
மணிவண்ண எந்தாய் ⋆
எய்தா நின் கழல் ⋆
யான் எய்த ⋆
ஞானக் கை தா ⋆
காலக் கழிவு செய்யேலே ‖ **2.9.2** ‖

செய்யேல் தீவினை என்று ⋆
அருள் செய்யும் ⋆
என் கையார் சக்கரக் ⋆
கண்ண பிரானே ⋆
ஐயார் கண்டம் அடைக்கிலும் ⋆

நின் கழல் எய்யாதேத்த ⋆
அருள் செய் எனக்கே ‖ **2.9.3** ‖

எனக்கே ஆட்செய் ⋆
எக்காலத்தும் என்று ⋆
என் மனக்கே வந்து ⋆
இடைவீடின்றி மன்னி ⋆
தனக்கே ஆக ⋆
எனைக் கொள்ளும் ஈதே ⋆
எனக்கே கண்ணனை ⋆
யான் கொள் சிறப்பே ‖ **2.9.4** ‖

சிறப்பில் வீடு ⋆
சுவர்க்கம் நரகம் ⋆
இறப்பில் எய்துக ⋆
எய்தற்க ⋆
யானும் பிறப்பில் ⋆
பல் பிறவிப் பெருமானை ⋆
மறப்பொன்றின்றி ⋆
என்றும் மகிழ்வேனே ‖ **2.9.5** ‖

மகிழ் கொள் தெய்வம் ⋆
உலோகம் அலோகம் ⋆
மகிழ் கொள் சோதி ⋆
மலர்ந்த அம்மானே ! ⋆
மகிழ் கொள் சிந்தை ⋆
சொல் செய்கை கொண்டு ⋆

என்றும் மகிழ்வுற்று ⋆
உன்னை வணங்க வாராயே ॥ **2.9.6** ॥

வாராய் ⋆
உன் திருப் பாத மலர்க்கீழ் ⋆
பேராதே யான் வந்து ⋆
அடையும் படி தாராதாய் ⋆
உன்னை என்னுள் வைப்பில் ⋆
என்றும் ஆராதாய் ⋆
எனக்கென்றும் எக்காலே ॥ **2.9.7** ॥

எக்காலத்தெந்தையாய் ⋆
என்னுள் மன்னில் ⋆
மற்றெக்காலத்திலும் ⋆
யாதொன்றும் வேண்டேன் ⋆
மிக்கார் ⋆
வேத விமலர் விழுங்கும் ⋆
என் அக்காரக் கனியே ⋆
உன்னை யானே ॥ **2.9.8** ॥

யானே என்னை ⋆
அறியகிலாதே ⋆
யானே என் தனதே ⋆
என்றிருந்தேன் ⋆
யானே நீ ⋆
என் உடைமையும் நீயே ⋆
வானே ஏத்தும் ⋆
எம் வானவர் ஏறே ॥ **2.9.9** ॥

ஏறேல் ஏழும் வென்று ⋆
ஏர் கொள் இலங்கையை ⋆
நீறே செய்த ⋆
நெடும் சுடர்ச் சோதி ⋆
தேறேல் என்னை ⋆
உன் பொன் அடிச் சேர்த்தொல்லை ⋆
வேறே போக ⋆
எஞ்ஞான்றும் விடலே ‖ **2.9.10** ‖

‡ விடலில் ⋆
சக்கரத்தண்ணலை ⋆
மேவல் விடலில் ⋆
வண் குருகூர்ச் சடகோபன் சொல் ⋆
கெடலில் ஆயிரத்துள் ⋆
இவை பத்தும் ⋆
கெடலில் வீடு செய்யும் ⋆
கிளர்வார்க்கே ‖ **2.9.11** ‖

அடிவரவு — எம்மா ஈதே செய்யேல் எனக்கே சிறப்பில் மகிழ்கொள் வாராய் எக்காலத்து யானே ஏறேல் விடலில் கிளரொளி

எம்மாவீடு முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்